# ரேவன்ஹில் பேஜஸ்



QUOTES SERIES : VOL - 4

அடைப்பட்ட அக்கினி

Pr. S. ROMILTON

**இவ்வாக்கியங்கள்...**

**ஞானிகளின்
தாற்றுக்கோல்கள்..**

**சங்கத்தலைவர்களால்
அறையப்பட்ட ஆணிகள்...**

**( பிரசங்கி 12.11 )**

அடைபட்ட அக்கினி

- தமிழில் -

**Pr. S.Romilton**
Delhi
98106 46981

**புத்தகங்கள் கிடைக்குமிடம்:**

**MRS. JENIFER ROMILTON**
246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

# எழுப்புதல் ஏவுகணைகள்
# VOL-4

"தன்னை முழுவதுமாய் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த ஒரு மனிதனைக் கொண்டு தேவன் செய்பவைகளைக் காண இந்த உலகம் காத்துக் கிடக்கிறது.." என்று சுவிசேஷகர் டி.எல்.மூடியின் நண்பர் ஹென்றி வார்லே சாதாரணமாய்த் தன் உரையாடலில் சொன்ன வார்த்தை ஒன்று மூடியின் உள்ளே நெருப்பைப் பற்றவைக்க, "நான் ஏன் அந்த மனிதனாய் இருக்கக்கூடாது? ஓ! என்னை அப்படிப்பட்ட ஒரு மனிதனாக்குமே.."என்ற அவரது ஜெபமே டி.எல். மூடியை தேவன் மிகப்பெரிய அளவில் உபயோகிக்கக் காரணமாயிற்று..

"ஒரு தேசத்தில் அக்கினியைக் கொளுத்த நெருப்புப் பொறி ஒன்றே போதுமானது" என்றார் C.H. ஸ்பர்ஜன்.

ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டு, எழுப்புதல் வீரர்களும் தேவ மனிதர்களுமாகிய ஞானிகளின் வாக்கியங்களாகிய மேற்கோள்களாய் இப்புத்தகத்தில் பதிவிடப்பட்டுள்ள இந்தத் தாற்றுக் கோல்கள், சங்கத் தலைவர்களாகிய இவர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகளாய் அநேக இருதயங்களில் பசுமரத்து ஆணிகளாய்ப் பதிந்து, எழுப்புதல் ஏவுகணைகளாய் தேசத்தில் தேவ அக்கினியைப் பற்றவைக்கும் என்னும் பாரத்துடனே இங்கே பதிவு செய்யப்படுகின்றன..

"அவன் என் நாளைக் காண வாஞ்சையாய் இருந்தான்.. கண்டு களிர்ந்தான்" என்ற வார்த்தை நிறைவேறும் தாகத்தோடு..

**ROMILTON**
**அடைபட்ட அக்கினி**

Leonard Ravenhill



We are trying to marry Christianity to prosperity, and popularity, and personalities..

**And it isn't working..**

## Leonard Ravenhill



நாம் கிறிஸ்தவம் என்ற மாப்பிள்ளைக்கு வளமை,செழுமை, கொழுமை, இளமை என்ற பெண் பார்த்து, சபை என்ற மணவாட்டியை பேர்,புகழ்,பெருமை,உல்லாசம் என்ற மணமகனோடு முடிச்சுப்போட்டு மணமுடித்துவிடத் தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறோம் !

**ஆனால் அது பரலோகத்தில் நிச்சயிக்கப்படாத, பூமியிலே கூடி வர வாய்ப்பில்லாத ஒன்று !**


Can you show me a
Church that really is
on Fire for God?
A Church where they have
All night prayer meetings?
No Church should
function without a
Whole night prayer !
Leonard Ravenhill


கர்த்தருக்காகத் தீயாய்ப்
பற்றியெரியும் சபை ஒன்றை
எனக்குக் காட்டுவீர்களோ?
இராவெல்லாம்
ஜெபம்.. ஜெபம்.. ஜெபம்..
ஜெபமாய்ப் பற்றியெரியும் சபை!
முழு இரவு ஜெபமே
இல்லாத ஒரு சபையை
"இழுத்து மூடு" என்று சொல்லுவேன்!
Leonard Ravenhill

*The Church has to rediscover two things..*



Leonard Ravenhill

***One, the majesty of the Holiness of God !***

***And the other, the sinfulness of sin !***

# சபை

## இரண்டு காரியங்களைக் திரும்பக் கண்டுபிடித்தாக வேண்டும்!



Leonard Ravenhill

ஒன்று, தேவனின் பரிசுத்தத்தின்
மாமகா மாட்சிமை!

இரண்டாவது, பாவத்தின்
மாமகா பயங்கரம்!

Leonard Ravenhill



**You can stage a roadshow revival..**

**You can stage a City wide Crusade..**

**But you cannot stage a God-sent Revival !**

Revival
Is a mysterious
Divine intervention !

Leonard Ravenhill



நீங்கள் உங்கள் கவர்ச்சிகரமான
நிகழ்ச்சிநிரல்களையெல்லாம்
பிரம்மாண்டமாக நிகழ்த்திக்காட்டி
எழுப்புதல் வெடித்துவிட்டது போலக்
காட்டிக் கொள்ளலாம்..
ஊரைக்கூட்டி முழங்கலாம்...

ஆனால் எந்த வகையிலும்
உண்மையான எழுப்புதலை மட்டும்
மேடையேற்றவே முடியாது..

அது தேவாதி தேவனே
வந்து எழுந்தருளும்
இரகசியத்திலும் இரகசியம்!


Leonard Ravenhill
Hadn't one sermon on
the day of Pentecost
produced 3000 people ?
And here 3000 sermons
are preached and
NOBODY IS SAVED !


Leonard Ravenhill
பெந்தெகோஸ்தே நாளின் ஒரே ஒரு
பிரசங்கம் மூவாயிரம் பேரை
மனமுடைந்து மனந்திரும்பச் செய்ததே ?
ஆனால் இங்கோ நாம் செய்யும் மூவாயிரம்
பிரசங்கங்களால் கூட ஒருவராகிலும்
மனந்திரும்பக் காணோமே !

***You see, we want a "revival" which is a painless Pentecost..***

***We want something that won't disturb our status quo..***

**There neither had been**
*one such..*
**Nor will ever be**
*one such !*



" பாடுகளில்லா பெந்தேகோஸ்தே "
என்னும் ஒரு எழுப்புதலையே
நாம் கேட்கிறோம்..

நமக்கு வேண்டியது, நமது
அன்றாட வசதி வாழ்க்கையைத்
தொட்டுத் தொந்தரவே செய்யாத
ஒரு ஈஸியான எழுப்புதல்..

**சத்தியமாய்**

அப்படி ஒன்று

**சாத்தியமே இல்லை !**

Leonard Ravenhill



Leonard Ravenhill



*You never have to advertise a fire! You don't have to advertise it in the newspaper...forget it!*

*Let the glory of the Lord fill the temple!*

*People will come from hundreds of miles!*

## Leonard Ravenhill



அக்கினிக்கு
அட்வெர்ட்டைஸ்மென்ட் அவசியமில்லை..
மல்ட்டி மீடியா விளம்பரங்கள்
தேவையில்லை..

தேவாலயத்திலே தேவ மகிமை
வந்து இறங்கட்டும்!
அவரது வஸ்திரத் தொங்கலால்
ஆலயம் நிரம்பட்டும்!

நூற்றுக்கணக்கான மைல்
தூரத்திலிருந்து கூட
கூட்டம் வந்து குவியும்!

Leonard  Ravenhill

## There Was A Man Sent From God

***Our present- day evangelism with all its emphasis on happiness would have shocked John the Baptist !***



Leonard  Ravenhill

தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்

**சந்தோஷத்தையும் செழுமையையுமே**
**மையமாகக்கொண்டு பிரசங்கிக்கப்படும்**
**இன்றைய நமது நாட்களின் ஜெகஜால**
**சுவிசேஷத்தைக் கேட்டு யோவான்**
**ஸ்நானகனுக்கு மாரடைப்பு வந்தாலும்**
**ஆச்சரியப்படுவதற்கில்லை !**





*I don't care whether you are thinking of Finney or Wesley or Booth, or any great majestic figure that has ruled in the church of God and seen revival, not one of them had a bigger Bible than you and I have.. It's the same Word.*

*Forget it ! If the world lasts another hundred thousand years, which it won't, but if it did, God doesn't have anything to add to that Book. He's said all in that 66 books He's ever going to say to man..*

Leonard Ravenhill





எழுப்புதலைக் கண்ணாரக் கண்டு, தங்கள் தலைமுறையின் எழுப்புதலின் நாட்களில் அன்றைய சபைகளைத் தங்கள் ஆவிக்குரிய ஆளுகையில் வைத்திருந்த ஜாண் வெஸ்லியோ, வில்லியம் பூத்தோ, சார்ல்ஸ் ஃபின்னியோ அல்லது அவர்களைப் போன்ற எழுப்புதல் ஜாம்பவான்களோ, இவர்கள் யாருமே நம்மை விட பெரிய மெகா சைஸ் பைபிள் வைத்திருந்தார்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களோ?

மறந்துவிடுங்கள்! இன்று நம்மிடமிருக்கும் இதே எழுதப்பட்ட வார்த்தை தான் அன்று அவர்களிடமும் இருந்தது !

நான் உங்களுக்குச் சொல்கிறேன்! உலகம் இன்னொரு நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சுழன்று சுகித்திருந்தாலும், தேவன் தாம் எழுதிக் கொடுத்த தமது புத்தகத்தில் இன்னொரு அத்தியாயத்தைக் கூட்டி எழுதப்போவதில்லை..

மனிதனுக்குத் தாம் சொல்ல வேண்டியது எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொல்லி, அந்த 66 புத்தகங்களுக்குள்ளே அவர் அடக்கிவிட்டார்..

**பிற்சேர்க்கைக்கு அவசியம் எதுவுமின்றி...**



Leonard Ravenhill



**_Do you want to see a revival in your church?_**

**_Just stand up next Sunday morning and say.._**

**_"Look, I want to tell you.._**

**_I don't have the vision I used to have.._**
**_I don't have the passion I used to have.._**
**_I don't have the concern I used to have.._**
**_I don't have the tears I used to have.._**

**_I lost the hunger for the Word.._**
**_I lost the thirst for prayer.._**
**_I lost my interest in the church fellowship.._**

**_But I have so many other things I am interested in !"_**

**_Then will come revival !_**

Leonard Ravenhill





உனக்குள்ளும் உன் சபையிலும் எழுப்புதலைப் பார்க்க விரும்புகிறாயோ? அடுத்த ஞாயிறு எழுந்து நின்று தைரியமாய்ச் சொல்!

"ஒரு காலத்தில் எனக்கிருந்த தரிசனம் இன்று இல்லை! ஒரு காலத்தில் எனக்கிருந்த ஆவியும் அனலும் இன்று இல்லை !"

"அழியும் ஆத்துமாக்களுக்காக ஒரு காலத்தில் எனக்கிருந்த பாரம் இன்று இல்லை ! என் கண்கள் கண்ணீரில்லை ! வேதத்தில் நாட்டமில்லை !"

"ஜெபத்தில் வாஞ்சையில்லை ! சபைக்கு வர விருப்பமில்லை !"

"வேண்டிய இவைகள் தவிர, வேண்டாத குப்பைகள் மனமெல்லாம் நிறைந்து மண்டிக்கிடக்கிறது" என்று வெட்கத்தை விட்டு துணிந்து நின்று சொல்லிப்பார் !

## பிறகு வெடிக்கும் எழுப்புதல் !



Leonard Ravenhill

Leonard Ravenhill



The question is not whether we know the Word of God..

The question is :

**DO WE KNOW**

**THE GOD OF THE WORD ?**

---

*If a preacher doesn't even know his God, why is he in this business ?*

---

Leonard Ravenhill



கர்த்தருடைய வார்த்தையை
நாம் அறிந்திருக்கிறோமா
என்பது கேள்வியில்லை...

அந்த வார்த்தையின்
கர்த்தரைத் தனிப்பட்ட முறையில்
அறிந்து வைத்திருக்கிறோமா
என்பதே கேள்வி !

---

தான் பிரசங்கிக்கும் ஆண்டவர்
யாரென்றே தனிப்பட்ட முறையில்
அறியாத ஒருவனுக்கு
இங்கே என்ன வேலை ?

---

Leonard Ravenhill

# *You see preacher,*

***You've only two things to do,***
***Not twenty two..***

***You are not supposed to be the janitor and running a business and finding about the church's bank balance and all that junk...***

***If you are going to be a true Bibilical Preacher, you got two things to do according to Acts 6:4..***

***Give yourself continually to prayer and the Word of God..***

***That's all you have to do !***



## பிரசங்கிக்கும் ஊழியனே!

"நீ செய்ய வேண்டியதெல்லாம்
ரெண்டே ரெண்டு வேலை தான்!
எழுவத்திரண்டு இல்ல!"

"கல்லா பெட்டியில உக்காந்து கணக்கு
வழக்குபாத்துட்டு இருக்கிற கடைக்காரன்
மாதிரி சர்ச்சுல உக்காந்து பேங்க் பேலன்ஸ்
எண்ணிகிட்டு இருக்காத! ஞாபகம் வச்சிக்க!
எல்லாம் குப்பைலயும் குப்பை!"

"நீ உண்மையிலே வேதத்தின்படி ஊழியம் செய்பவனாய்
இருந்தால், அப் 6:4ன் படி, நீ இரண்டே இரண்டு காரியம்
தான் செய்ய வேண்டும். ஜெபத்திலும் தேவ வசனத்தைப்
போதிக்கிறதிலும் மட்டுமே இடைவிடாமல் தரித்திருக்க
உன்னை ஒப்புக்கொடுத்துவிடு!"

"இது மட்டும்தான்
நீ செய்யவேண்டியது!"



Leonard Ravenhill



**In my conclusion pulpit is no place for puppets..**

**In this day in which we live, it's the prophets of the past we need..**

***The prophet by the very nature of his calling, a fierce, fiery and a fearless figure..***

~~~~~~~~
~~~~~~~~




எனக்குத் தெரிந்தபடி
பிரசங்கபீடம் என்பது
கூத்தாடிகளின் மேடை அல்ல..

நமது இன்றைய தேவை
பூர்வகாலத் தீர்க்கர்கள் !

*தீர்க்கதரிசி ஒருவன்,*
*தன் அழைப்பு*
*எப்படியோ, அப்படியே*

**தீனமாய்,**
**தீர்க்கமாய்,**
**தீயாய் நிற்பான் !**

~~~~~~~~
~~~~~~~~



***The formula of revival is this :***

***Preachers need to hit the altars and weep because they have no tears..***

***Groan because there is no moving of the Spirit of God..***

***Apologize to God that we've kind of manipulated the Supernatural..***

Leonard Ravenhill





## எழுப்புதலின் சூத்திரம் இதுவே !

"ஐயோ ! நெஞ்சில் பாரமின்றி, கண்ணில் கண்ணீரின்றி நாங்கள் சோரம்போய்த் திரிகிறோமே !" என்று தங்களைத் தாங்களே தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொள்ளுகிற பிரசங்கிகள் பலிபீடத்தில் முட்டி முட்டி அழுது புலம்பட்டும்!

"ஐயோ! பெருக்கம் பெருக்கமான ரெகோபோத் என்று சொல்லிக் கொண்டு அலைகிற பிரசங்கிகளாகிய எங்கள் நடுவிலிருந்து தேவ மகிமை விலகி, இக்கபோத் என்ற இழிநிலையில் கிடக்கிறோமே!" என்று இருதயத்தைக் கிழித்துக்கொண்டு, அப்போஸ்தலர் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளுபவர்கள் அலறி அழட்டும்!

"பொன்னுக்குப் பதிலாக வெண்கலத்தையும், பரிசுத்தத்துக்குப் பதிலாகப் பரவசத்தையும், ஆவியிலும் உண்மையிலும் செய்யும் ஆராதனைக்குப் பதிலாக ஆட்டபாட்டத்தையும், கண்டுபிடித்த எங்களை இரக்கமாய் மன்னித்துத் திரும்பவும் உயிர்ப்பிக்க மாட்டீரோ?" என்று இரட்டுடுத்தி, தலையில் சாம்பலை அள்ளிப்போட்டுக்கொண்டு, மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே ஆசாரியர்கள் மூச்சுப் பேச்சின்றி மூர்ச்சித்து விழுந்து கிடக்கட்டும் !

**அப்புறம் நடக்கும் அற்புதம் !**

Leonard Ravenhill



**We mistake**

**RATTLE for REVIVAL, and**

**COMMOTION for CREATION, and**

**ACTION for UNCTION..**



Leonard Ravenhill

நாம்
கூட்டத்தை எழுப்புதல் என்றும்,
கூச்சலை அபிஷேகம் என்றும்,
கட்டுக்கதைகளைக் கர்த்தருடைய
வார்த்தை என்றும்
தவறாக எடைபோட்டுவிட்டோம்...



Leonard Ravenhill



***The Shame of barrenness of Rachel got to be a burden beyond endurance and in despair she flung herself at the feet of her husband with the shattering cry,"Give me children, or else I die.."***

***Something of this Shame must overcome us if we are to see our spiritual desert rejoice and blossom as the rose. Before the Lord will move in power, our orthodoxy will have to be stabbed, our conventions shattered, and our stony hearts again know tears..***

Leonard
Ravenhill



ராகேலின் பிள்ளையற்ற தன்மை என்ற தாங்க முடியாத வெட்கம், நிமிர முடியாத பாரமாய், சகிக்கவே முடியாத அவமானமாய் அவளைத் தரையோடு தரையாய் நசுக்க, தன் புருஷனின் கால்களைப் பிடித்துக் கதறினாள்..."எனக்குப் பிள்ளை கொடும்.. இல்லாவிட்டால் நான் சாகிறேன்.."

**நமது ஆவிக்குரிய வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, நமது ஜெபவாழ்வு என்ற கடுவெளி களித்து புஷ்பத்தைப் போலப் பூத்து, லெபனோனைப் போல செழிக்க வேண்டுமென்றால், இப்படி ஒரு வெட்கமும் அவமானமும் நம் மேல் வந்து விழுந்து நம்மை மூட வேண்டும்!**

***கர்த்தர் தமது வல்லமையோடு நம் மேல் இறங்கு-முன் நம்முடைய பாரம்பரியங்கள் வெட்டுண்டு, பழைமைவாதங்கள் கட்டோடு ஒழிந்து, நமது கல்மனங்கள் கண்ணீரில் கரைந்து போக வேண்டும்!***

Leonard Ravenhill

Leonard  Ravenhill

*We have labored in the flesh too long. We have interpreted success by material gain and have believed that bigger buildings, crowds, and offerings are proof of his favor..*

*We have had pigmy preachers too long and now we need giants..*

*We have had promoters too long and we need prophets..*

*We have played evangelism with hundred gimmicks..*

---

*"Lord give us in this dark hour of human history a John the Baptist to burn and shine, and to pray as John Knox prayed over Scotland "Give me America or I die!"*

---



## Leonard Ravenhill

நமது சுயபெலத்திலேயே எவ்வளவோ காலம் ஊழியம் செய்து விட்டோம்!

**உலக ஐசுவரியங்களையே வெற்றியின் அடையாளங்கள் என்றும், பெரிய பெரிய சபைக் கட்டிடங்களையும், ஜெப கோபுரங்களையும் தரிசனத் தோட்டங்களையும், கூட்டமான கூட்டங்களையும் காணிக்கைகளையுமே தேவனின் மனங்கவர் ஊழியங்களின் அடையாளங்கள் என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனோம்! ஏமாந்து போனோம்! ஏமாற்றிவிட்டோம்!**

நாடகக் கூத்தாடிகளோடு நீண்டகாலம் பொழுது போக்கியது போதும்! ஊழிய வியாபாரிகள் போகட்டும்! சுவிசேஷம் அறிவிக்கிறோம் என்று சொல்லி நமக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் கையாண்டு பார்த்து விட்டோம். வரவேண்டிய எழுப்புதல் மட்டும் வரக்காணோம்!

**இப்போது நமக்குத் தேவை ஆவிக்குரிய மாவீரர்கள்! இன்றைய நமது அவசரத் தேவை பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகள்!**

---

*தேவனே! மனித வரலாற்றின் இந்த ஆவிக்குரிய இருண்ட காலத்தில், எரிந்து பிரகாசிக்கும் யோவான் ஸ்நானகன்களையும், தன் ஸ்காட்லாந்துக்காக கதறிய ஜாண் நாக்ஸைப் போல "இந்தியாவைத் தாரும், இல்லாவிட்டால் சாகிறேன்" என்று கதறும் ஜெப வீரர்களையும் எங்களுக்குத் தருவீராக!*

---




*We try to induce happiness*
*on a heart that is*
*still disease with sin..*

*We offer band- aids to folks*
*who need radical spritual surgery*
*for the cancer of carnality..*

*We preach to produce*
*peace in the heart, but..*

*John preached to produce panic !*



*Leonard Ravenhill*




பாவ வியாதியால் சாவின் விளிம்பில்
நின்று கொண்டிருக்கும் ஒருவனைப்
பார்த்து, "பயப்படாதே! சந்தோஷமாயிரு!
எல்லாம் சரியாகிவிடும்!" என்று நாம்
மேல்பூச்சு பூசிக்கொண்டிருக்கிறோம்..

மாம்ச இச்சை ரோகங்கள் புற்றெடுத்து
புற்றுநோயாய்ப் பரவிக் கொண்டிருக்கும்
கூட்டத்துக்கு ஆவிக்குரிய அவசரகதி
ஆப்ரேஷன் செய்து பாவக்கட்டியை வெட்டி
வீசுவதை விட்டு விட்டு அவர்களுக்கு Band-Aid
கொடுத்து "போட்டுக்கொள்" என்கிறோம்..

நமது பிரசங்கங்கள் இதயத்துக்கு
இதமான சமாதானங்கள்!

யோவானோ கேட்டவர்களைக்
குலைநடுங்கப் பண்ணினான்!



Leonard Ravenhill

Leonard Ravenhill



*The evangelism of the past fifty years has been the most costly in history!*

*Revival never costs a penny!*

*It is the Lord's doing..*

*And*

*is marvelous in our eyes!*



Leonard Ravenhill



கடந்த ஐம்பது வருடங்களைப் போல
சுவிசேஷம் அறிவிக்கப்படக் கோடி
கோடியாய் செலவழிக்கப்பட்டது
வரலாற்றிலேயே இல்லை !

உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல்
ஒரு நயா பைசா செலவில்லாதது !

அது கர்த்தராலே ஆகும் !
அது நம்முடைய கண்களுக்கு
ஆச்சரியமாய் இருக்கும் !

ஆம் ! அது தான் எழுப்புதல் !





*"If John the Baptist came back today, he would not be a voice crying in the wilderness, but* **CRYING IN THE CHURCH"**

***Oh, for men who will wait upon the Lord, hear His voice, get a baptism of His power and an authority to deliver His message to the sick church and the dying world !***



Leonard Ravenhill



யோவான் ஸ்நானகன் இன்று
உயிரோடு திரும்பி வருவானானால்,
அவனது சத்தம் வனாந்தரத்தை
அல்ல..இன்றைய ஆலய
வளாகங்களை அதிரப்பண்ணும்!

ஓ! தேவ சமூகத்தில் தரித்திருந்து,
அவர் சத்தம் கேட்டு, அவரது
வல்லமையில் மூழ்கி எழுந்து, அவரது
செய்தியை, நொந்து நோய்பட்டு
நசல்கொண்ட சபைக்கும், செத்துக்
கொண்டிருக்கும் தேசத்துக்கும்
ஆவியின் அதிகாரத்தோடு பறைசாற்றும்
மனிதர் எவரும் இங்கில்லையோ ?

Leonard
Ravenhill




Leonard Ravenhill
We can no more have a
Spirit-born revival without a
moral and spiritual upheaval,
than we can have an
earthquake without destruction...


Leonard Ravenhill
சர்வநாசம் செய்யாத பூகம்பமும் உண்டோ?
ஆவியில் பிறந்து வெடித்துச் சிதறும்
எந்த எழுப்புதலும் சபையையும்,
சமுதாயத்தையும் சுக்குநூறாக்கி, தேசத்திலும்,
தம் ஜனத்தின் மத்தியிலும் தேவன்
செய்ய நினைத்ததை முழுவதும்
செய்துவிட்டே போகும் என்பதில்
சந்தேகமும் உண்டோ?


Leonard
Ravenhill
I can almost hear Duncan
Campbell saying how
they cried in Scotland,
"Oh, that Thou wouldst rend
the heaven and come down..."
You see, we've never seen
God move till He's
stopped the traffic..
Till people in the clubs
stop singing and dancing..
Till the lights of the
sanctuay don't go out
week after week..
Till the Holy Ghost
is moving in factories..
He's done that
in other
REVIVALS..

Leonard Ravenhill

**Duncan Campbell** நாட்களில் ஸ்காட்லாந்தில் அவர்கள், "தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன் உருகும்படி செய்வீராக!" என்று கதறிய சத்தத்தைக் கொஞ்சங்குறைய என்னால் இன்னும் கேட்க முடிகிறது..

மக்கள் நடந்துபோகும்போதும், வாகனங்களில் போய்க் கொண்டிருக்கும்போதும், பாவ உணர்வடைந்து, நெஞ்சில் அடித்துக்கொண்டு, நடைபாதைகளிலும், வழிகளிலும், ரோடுகளிலும், தெருக்களிலும் விழுந்து கிடந்து, ஆங்காங்கே நம்முடைய வீதிகளிலும் Highwayக்களிலும் Traffic jam ஏற்படும் அளவுக்குக் கிரியை செய்யும் ஆவியானவரின் பலத்த கிரியைகளை நாம் நமது கண்களால் இன்னும் காணவில்லையே?

கல்யாணங்களிலும், பார்ட்டிகளிலும், டிஸ்கோ க்ளப்களிலும் DJ என்ற வண்ண விளக்கொளி ஆட்டம் பேயாட்டம் நிரந்தரமாய் நின்றுபோவதை எப்போது பார்க்கப்போகிறோம்?

நமது ஆலய வாசல் கதவுகள் மூடப்படாமல், நாட்கணக்காக, வாரக்கணக்காக விளக்குகளே அணையாமல், சங்கிலித்தொடர் ஜெபங்கள் சங்கிலியாய் நீண்டு நிரந்தரமாகும் நாட்கள் எப்போது வரும்?

எழுப்புதல் வரலாறுகளின் நாட்களில் தொழிற்சாலைகளிலும், நிலக்கரி சுரங்கங்களிலும் அடித்த எழுப்புதல் அலைகளையெல்லாம் தூக்கியெறியும் ஒரு வரலாறு காணா எழுப்புதல் சுனாமி, நமது கார்ப்பரேட் ஆபீஸ்களையும், பாராளுமன்றங்களையும், பட்டிதொட்டிகளையும், அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், ஆலய வளாகங்களையும், ஆன்மீக ஆசிரமங்களையும், மருத்துவமனைகளையும், மாந்திரக மயானங்களையும் எப்போது புரட்டிப்போட்டு கீழது மேலது ஆக்கப்போகிறது?





## Leonard Ravenhill

***I believe if we were as spiritual as we think we are..***

***we would have gone into the sanctuary in sack cloth and a handful of ashes to put on our head..***

***and mourn that the Glory has departed !***








Leonard Ravenhill

நாம், நம்மை நாமே எவ்வளவு பெரிய
ஆவிக்குரிய பரிசுத்தவான்கள்
என்று பெருமையடித்துப்
பீத்திக்கொண்டிருக்கிறோமோ,
அதில் பாதியாவது இருந்தோமானால்,

இந்நேரம் இரட்டுடுத்திக்கொண்டு, தகாத
நம் தலைகள் மேல் உலையின் சாம்பலை
அள்ளிப் போட்டுக்கொண்டு..

"மகிமை நம்மை விட்டுப்போயிற்றே"
என்று பரிசுத்த ஸ்தலத்திலே
முகங்குப்புற விழுந்து
புலம்பலாய்ப் புலம்புவோம்!








*We're going to see the King of kings.*
*He's the Judge of judges in the Court of courts.*
*There is no tribunal after this. It is finished!*

*When I hear people singing*
*"Put your hand in the hand of the Man*
*who stilled the waters," or "Shake hands*
*with Jesus," I say, "Forget it!"*

*Listen, when you see Jesus,*
*you're not going to go up and say,*
*"Hey, buddy, I'm glad You died for me."*

*When you see Jesus, you'll be almost*
*paralyzed with fear unless you have a*
*glorified body and a glorified mind !*






இயேசுவை உயர்நீதி மன்றங்களுக்கெல்லாம் மாமன்றமான நித்திய நீதிமன்றத்திலே நீதிபதிகளுக்கெல்லாம் நியாயாதிபதியாக, மன்னாதி மன்னராக சந்திக்கப் போகிறோம். அதற்கு மேலான எந்த வழக்காடுமன்றமும் இல்லை.. நியாய சங்கமும் இல்லை ! அதோடு முடிந்தது எல்லாம் !

*"காற்றையும் கடலையும் அதட்டினவரின் கரங்களோடு கைகோர்த்து ஆடுங்கள்!" என்றோ, "இயேசுவோடு கைகுலுக்கிடுவோம் வாருங்கள்!" என்றோ இங்கே நீங்கள் விவரம் புரியாமல் பாடுகிறீர்கள்! ஆனால் அங்கே அப்படி ஒன்றை நினைத்துக் கூடப் பார்த்துவிடாதீர்கள்!*

இயேசுவை சந்திக்கும் அந்த நாளிலே உங்களில் யாரோ ஒருவர் அவருடன் கை குலுக்கி, O my Friend ! நீர் எனக்காய் மரித்ததற்காய் ரொம்ப சந்தோஷம்..Thanks Dear.. என்றெல்லாம் மெய்மறந்து சொல்வீர்கள் என்று நினைக்கிறீர்களோ ?

*நீங்கள் மறுரூபமாகி மகிமையான சரீரமும் மகிமையான மனமும் உடையவர்களாய் அவர் சமூகத்தில் நில்லாத பட்சத்தில், அவரைக் கண்ட மாத்திரத்தில் பயத்தில் உறைந்து பக்கவாதமாகிப் போவீர்கள்!*






# ETERNITY

If we took hold of
eternity as a reality,
I'm convinced
we'd be a different
breed of people...

Leonard Ravenhill

~~~~~~~~
~~~~~~~~




# ETERNITY

"நித்தியம் ஒரு நிதர்சன உண்மை"
என்று நடுக்கத்தோடு நாம்
ஒவ்வொருவரும் நமக்கென்று அதை
எடுத்துக்கொண்டிருந்தோமானால், நாம்
இப்போது இருக்கும் நாமாக இல்லாமல்,
முற்றிலும் வேற்று மனிதராகவும்,
சாயலும் பதிப்புமாகவுமே இருப்போம்
என்பதில் எனக்கு எந்த மாற்றுக்
கருத்தோ மறுமதிப்பீடோ இல்லை..

Leonard Ravenhill

~~~~~~~~
~~~~~~~~

## *The Judgement Seat Of Christ*



***If in heaven they continually sing,***
***"Worthy is the Lamb.."***

***In hell the only thing they sing is***
***"The harvest is past, the summer is ended***
***and we are not saved" (Jer. 8:20).***

Leonard Ravenhill



## கிறிஸ்துவின் நியாயாசனம்



பரலோகத்தில் பரிசுத்தவான்கள்
"ஆட்டுக்குட்டியானவர் கனத்துக்கும்
மகிமைக்கும் பாத்திரர்" என்று இடைவிடாமல்
பாடிக் கொண்டிருப்பார்களானால்..

நரகத்திலோ, "அறுப்புக்காலம் சென்றது..
கோடைக்காலமும் முடிந்தது.. நாமோ
இன்னும் இரட்சிக்கப்படவில்லை.." (எரே 8:20)
என்ற அங்கலாய்ப்பே புலம்பலாய் ஓலமாய்
ஓங்கி ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை..

Leonard Ravenhill






Apparently Hannah was so distressed that she fasted...

Then said Elkanah her husband to her, Hannah,...why eatest thou not ?"

*How did moses fast forty days and then after his trouble return again and fast another forty days ? Are we greater than Moses ?*

*How is it that the Son of God fasted alone in the desert ? Are we better informed than the Son of God?*

*Why does Paul talk of weariness, painfulness, fastings? Have we got a better view of things than had Paul ?*



*Paul might get a little rough with us today and say that we are of those "whose god is their belly..."*




## அன்னாள் செய்ததை சற்று படித்துப் பாருங்கள்!

**அழுது சஞ்சலித்து மனம் கசந்து போன
அவள் அன்ன ஆகாரத்தையும் மறந்தாள்..**

*அவளது புருஷன் எல்க்கானா கேட்டான்..
"அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்?"*

**மோசே, மலையில் ஒரு 40 நாட்கள் சாப்பிடாமலிருந்து, மறுபடியும் இஸ்ரவேலரின் அக்கிரமத்தைக் கண்டு மலை மேல் ஏறி இன்னொரு 40 நாட்கள் உபவாசிக்க அவனுக்கு என்ன வந்தது? நாம் என்ன அந்த மோசேயை விட உசத்தியோ?**

*தேவ குமாரனுக்கு வனாந்திரத்தில் 40 நாட்கள் உபவாசிக்க வேண்டிய கட்டாயம் என்ன? நாம் என்ன அவரை விட மேலோ?*

**"அநேக முறை பாடுகளிலும் கட்டுகளிலும் உபவாசங்களிலும்" என்றானே பவுல்? அதற்கு அவனுக்கு அவசியம் என்ன? நாம் என்ன பவுலை விட இன்னும் பத்தாம் வானம் வரை எடுக்கப்பட்டு பரதீசின் பாஷைகளைக் கேட்டு விட்டோமோ?**



**பவுல் இன்று நம்மைக் கண்டால் - "பெருவயிற்றுச் சோம்பேறிகள்! இவர்கள் தேவன் வயிறு!" - என்று நம்மைக் கொஞ்சம் அருவருப்போடு தான் பார்ப்பான்!**

Leonard  Ravenhill

*This much is sure :*

***From the time of conception until the appointed time of deliverance, Hannah had to stay with her precious burden.***

***Alas and alas, this is a rush age.
If we could, we would rush God too.***

***We want big
blessing for
small installments,
the birth of
revival,
but not
pain of the birth..***



Leonard  Ravenhill

**இது மட்டும் நிச்சயம் :**

**தான் கர்ப்பம் தரித்த நாள் முதல்
பிரசவிக்கும் நேரம் மட்டும் அன்னாள்,
தான் ஏங்கித் தவித்த பாரத்தைத்
தன்னோடு சுமந்தே திரிந்தாள் !**

**ஆனால் ஐயோ! இதுவோ ஒரு அவசரகதி
யுகம்! விட்டால் ஆண்டவரையே கூட நம்
அவசரத்துக்கு ஓட்டினாலும் ஓட்டுவோம்!**

**நமக்கு சுலப
தவணையில்
பெருத்த ஆசீர்வாதம்
வேண்டும் !
எழுப்புதல்
பிறக்க வேண்டும்..
ஆனால் பிரசவ
வேதனையெல்லாம்
வேண்டவே வேண்டாம்!**





*All Hannah had was geared to give her the child she had asked of God..*

*There were late nights when sleep would not come..*
*There was throwing aside of the social programme..*
*There may have been a distaste for food.. and..*
*There may have been midnight hours..*

*Later, while others were sleeping, Hannah was still awake because of the near birth of her coveted child. She would not have the situation otherwise..*

*All this experience can be translated into terms for revival praying..*



*In our day we do not pray that the miracle of revival will simply erase the record of our barrenness..*

Leonard Ravenhill



கர்த்தருக்காகக் கேட்கப்பட்ட
பிள்ளை அன்னாளுக்குக்
கொடுக்கப்படும்படி,
அவளுக்குள்ளிருந்த அனைத்தும்
உயிர்பெற்று சிலிர்த்தெழுந்தன !

குழந்தை பிறப்பின் கடைசி மாதங்கள்
அவளது வழக்கமான அன்றாட வாழ்க்கையை
மாற்றிவிட்டது. தூக்கம் தூரம் போய்
புரண்டு புரள ஆரம்பித்தாள். வெளியே
தலைகாட்டாமல் வீட்டுக்குள்ளேயே
முடங்கினாள்..ஆகார ஆசை அற்றுப்போனது..

அருகிலிருந்த அனைவரும் தூங்கினாலும்
அவளோ நெடுங்காலமாய்க் காத்திருந்த
பிள்ளைக்காய், இப்போதோ அப்போதோ என்று
தூக்கமின்றி விழித்தே கிடந்தாள்.. வயிற்றில்
பிள்ளை இல்லாதிருந்தால் இப்படித் தவிப்பாளோ ?

*இந்த எல்லா அனுபவங்களையும்*
*எழுப்புதலுக்கான ஜெபத்தோடு*
*ஒப்பிட்டுப் பாருங்கள்!*



*நமது ஆவிக்குரிய
மலட்டுத்தன்மையின்
நிந்தையை
எழுப்புதல்
என்ற அற்புதம்
என்றென்றைக்குமாய்
நீக்கிப்போடும்
அளவுக்கு நம்
நாட்களில் நாம்
ஜெபத்தில் கதற
வேண்டிய அளவு
கதறவில்லை என்றே
நான் சொல்லுவேன்..*

Leonard
Ravenhill



***Wet- eyed, heartbroken revivalists produce wet-eyed, broken-hearted sinners at the feet of a Holy God !***

Leonard  Ravenhill



தலை தண்ணீரும் கண்கள்
கண்ணீர் ஊற்றுமான நொறுங்கிய
இருதயமுள்ள எழுப்புதல் வீரர்களே,
உடைந்த இருதயத்தோடும் கதறிய
கண்களோடும் தங்களை ஒப்புக்-
கொடுக்கும் பாவிகளைப் பரிசுத்த
தேவனின் பாதத்தில் கொண்டு
வந்து சேர்க்க முடியும் !

Leonard  Ravenhill


Judgment Seat Of Christ
"We must all stand at the
Judgment Seat of Christ."
There is no exception..
Can you see those millions of unholy dead?
All the criminals who ever lived..
All the prostitutes..
All the men who make
millions from pornography ?
Can you think of the pimps who pollute
those little girls in the red light
areas elsewhere ?
Leonard Ravenhill



# Judgment Seat Of Christ

"நாம் எல்லாரும் கிறிஸ்துவின்
நியாயாசனத்துக்கு முன்பாக நிற்க வேண்டும்.."
யாரும் இதற்கு விதிவிலக்கே இல்லை.

**மில்லியன் மில்லியன்களாய் அங்கே நிற்கதியாய் நிராதரவாய் நிர்ப்பாக்கியமாய் நிற்கும், பாவத்தில் மாண்டு போன மனிதர்களைக் காண்கிறீர்களா ?**

இது வரை உலகத்தில் வாழ்ந்த உயர்தரக் கிரிமினல்கள் ! தங்கள் விபச்சாரத்திலேயே ஊறி நாறி செத்துப் போன வேசிகள், வேசிக்கள்ளர்கள் !

**போர்னோக்ராஃபி என்ற முழு நிர்வாணப் படங்கள் மூலம் கோடி கோடியாய் கொட்டி சம்பாதித்த நீசப்பாவிகள், நீலம் கோர்த்த முகத்தோடு நின்று கொண்டிருப்பார்கள் !**

*உலகத்தின் மாநகரங்களிலே பாவமறியாத சிறுமிகளை விபச்சார விடுதிகளில் தள்ளிவிட்டு லட்சலட்சமாய் பணம் பார்த்த இடைத்தரக அரக்கிகளை அங்கே நிற்கக் காண்பீர்கள் - தங்கள் முகத்தை மூட வழியின்றி !*

*இங்கே கலர் கலராய் ரெயின்போ வண்ணங்களில் கொடி பிடித்து ஊர்வலம் வந்த Gay என்ற ஆண்புணர்ச்சிக்காரர்களையும் lesbian என்ற பெண் புணர்ச்சிக்காரர்களையும், இவர்களைத் தங்கள் ஆலய ஆல்ட்டரிலேயே திருமணம் என்ற பெயரில் சேர்த்து வைத்த பாதகப் பாதிரிகளையும் பிஷப்புகளையும், லிவ்-இன்-பார்ட்னர்ஸ் என்ற அருவருப்பாளர்களையும் வெட்கத்தால் கூசி, கூனிக்குறுகி நிற்கக் காண்பீர்கள் !*

Leonard
Ravenhill



# The Judgement Day

***The unholy dead are going to stand, great and small, before God..***

***Sometimes I look at my Encyclopedia Britannica and I think of all the history that is going to pass before me in the flesh..***

***I'll be interested to see Julius Caesar and Tiberius Caesar..***

***I'll be fascinated when Pontius Pilate stands before Jesus. I think he'll be more uncomfortable than Jesus felt standing before him !***

***It will be awesome when we see the founders of these cults stand before God..***

***I don't care if he flies his own private jet or how many cities or millions of people he rules. It doesn't matter..***

**The great of the earth and the lowest of the earth are all going to spend their time in eternity. They are going to live there forever and ever, "where their worm does not die" (Mark 9:48)**



# The Judgement Day

**வேதம் சொல்கிறபடி, மரித்த பெரியோரும் சிறியோரும் அங்கே நிற்பார்கள்..**

*என்னிடம் இருக்கும் பிரிட்டானிக்கா என்சைக்ளோபீடியாவை சில நேரங்களில் நான் பார்க்கும் போது, மனித வரலாற்றுப் பக்கங்கள் நித்தியத்திலே ஒவ்வொன்றாகப் புரட்டப்படப் போவது என் கண்முன்னே வந்து போகின்றது..*

*ரோம, கிரேக்க சாம்ராஜ்யங்களின் ஜூலியஸ் சீசரையும் திபேரியஸ் சீசரையும் அங்கே நிர்க்கதியாய் நிற்கக் காண்கிறேன்..*

*இராஜாதி ராஜாவாய் வீற்றிருக்கும் இயேசு கிறிஸ்துவுக்கு முன் பொந்தியு பிலாத்து நிற்கும் காட்சி என்னை மிகவும் கவர்கிறது. ஒரு காலத்தில் அவனுக்கு முன்பாக என் ஆண்டவர் இரத்தம் சொட்டச் சொட்ட நின்ற போது, அன்று அவருக்குள் ஓடிய உணர்வுகளை விட, இன்று அவருக்கு முன்பாக அதே பிலாத்து, தர்மசங்கடத்தோடு அல்ல..பயத்தில் இரத்தம் உறைந்து பேயறைந்து போய் நிற்பான் என்றே நினைக்கிறேன்..*

*உலகத்தில் தோன்றிய எல்லா சாத்தானிய இயக்கங்களும், கள்ள உபதேச கல்ட் க்ரூப்களின் தலைவர்களும் அங்கே தலைகுனிந்து நிலைகுலைந்து நிற்கிறதைக் காண்கிறேன்..*

*எத்தனை எத்தனை இராஜ்யங்கள் மேல் அரசாண்டவனானாலும் சரி, எத்தனை பெரிய வர்த்தக சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியேயானாலும் சரி.. தன் சொந்த ஆடம்பர ஹெலிகாப்டரிலேயே உலகம் முழுவதையும் சுற்றி வந்து உலகத்தையே விலைக்கு வாங்கிக் கொண்டவனானாலும் சரி..எனக்குக் கவலையில்லை..*

*பூமியின் பேர் போனவனும், ஒன்றுமில்லாத ஓட்டாண்டியும் ஒருவர் விடாமல், புழு சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும் அந்த நித்தியத்திலே என்றென்றைக்குமாகத் தன் காலத்தைக் கழித்தே ஆக வேண்டும்!*



# THE JUDGEMENT SEAT OF CHRIST



***The Bible describes Jesus in all His splendor and glory..***

*"His head and His hair were white like white wool, like snow; and His eyes were like a flame of fire; And His feet were like burnished bronze, when it has been caused to glow in a furnace, and His voice was like the sound of many waters.His face was like the sun shining in its strength. (Rev. 1:14-16)*

*And here is John, who used to lean his head on the bosom of Jesus and hear that divine heartbeat..*

*John was the man that I believe knew more about Jesus than anyone else, and when he saw Jesus in His majesty, this man who had walked with Him and talked with Him for three years, says,*

*"And when I saw Him, I fell at His feet as a dead man" (Rev. 1:17).*

---

**If John responded like that, what do you think you and I are going to do !**

---

Leonard Ravenhill

# THE JUDGEMENT SEAT OF CHRIST



## வேதம் மகிமையான இயேசுவை இவ்விதமாய் வர்ணிக்கிறது..

*"அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாய் இருந்தது; அவருடைய கண்கள் அக்கினி ஜூவாலையைப் போலிருந்தது..அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது..அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.." (வெளி 1:14-16)*

யோவான்..இயேசுவின் மார்பில் சாய்ந்து, அவரது இதயத் துடிப்பைத் தன் செவிகளால் கேட்டிருந்த திவ்ய வாசனாகிய யோவான்...

மற்ற எல்லா சீஷர்களையும் விட இயேசுவை மிக அந்நியோந்நியமாய் அறிந்திருந்த யோவான்..

இயேசுவோடு மூன்றரை வருடங்கள் உண்டு உறங்கி அவரது வார்த்தைகளைக் கேட்டு, அவரோடு நடந்து, அவரைத் தொட்டு உணர்ந்து, சிலுவை வரை சென்று நின்ற அதே யோவான் எழுதுகிறார்..

*"நான் அவரைக் கண்டபோது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்.."*

---

அப்படிப்பட்ட யோவானுக்கே அந்த நிலை என்றால் நீங்களும் நானும் என்ன கதியாவோம் என்று நினைக்கிறீர்கள் !

---

Leonard Ravenhill

*Can you imagine when God takes hold of history and empties it ?*

*When every man who ever walked the streets of ancient Babylon with all its lusts, or Corinth which was just one colossal cesspool of impurity, must account for himself ?*



# JUDGMENT SEAT OF CHRIST

*When all that has happened in Las Vegas and Lucknow last night is going to be "thrown on the screen" in eternity!*

*Every king that has ruled over England, the caliphs of Baghdad, the maharajas of India, the multi-millionaires, the billionaires -- they're all going to stand one day!*

*Can you imagine that?*

Leonard Ravenhill

மனித வரலாறுகளின் சரித்திரத்தால் நிறைந்த
வரலாற்றுப் பெட்டியை தலைகீழாய்க் கொட்டிக்
கவிழ்த்துப் போட்டுக் காலி செய்து, ஒவ்வொருவரின்
சொல்லப்படாத கதைகளையும் ஒவ்வொன்றாகக்
கர்த்தர் தம் கையில் எடுத்துப் பிரிக்க ஆரம்பிக்கும்
போது எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

பாவத்தைப் பச்சைத் தண்ணீராய்க் குடித்த
பழங்கால பாபிலோனின் தெருக்களில்
கும்மாளம் போட்டவர்களும், அறிவு ஜீவிகள்
அசுத்தமாய் ஜீவித்த கொரிந்து பட்டணமும்
கணக்கு கொடுத்தே ஆக வேண்டும்!

நேற்று இரவில் லாஸ் வெகாஸில் நடந்த
அக்கிரமங்களும் லக்னோவில் நடந்த
அசிங்கங்களும் அங்கே நித்தியத்திலே
வெட்டவெளி மைதானத்திலே திரையிடப்படும்!



# JUDGMENT SEAT OF CHRIST

காலாகாலமாக இங்கிலாந்தை அரசாண்ட
மாமன்னர்களும், பிரிட்டிஷார் ஆளும் தேசங்களிலே
சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று மார்தட்டி
உலகம் முழுவதும் கோலோச்சிக் கொண்டிருந்த
மகாராணிகளும், பாக்தாத்தின் காலிபாக்களும்,
இந்தியாவின் ராஜா மகா ராஜா பாதுஷாக்களும் -
மல்ட்டி மில்லியனர் பில்லினர்களும், சாஃப்ட்வேர்
உலகின் முடிசூடா மன்னர்களும், ஹாலிவுட் ஹீரோ
ஹீரோயின்களும் அணி அணியாய் அணிவகுத்து
வந்து நிற்கப் போகும் அந்தக் காட்சியை கற்பனை
செய்து பார்ப்பீர்களோ?

இந்த உலகத்தில் இருந்த நாட்களில் அவர்கள்
ஆடிய ஆட்டத்துக்கெல்லாம் கணக்கு கொடுக்க
வரிசையில் வந்து நிற்பார்கள்!

Leonard Ravenhill

## There Were Giants In The Church

# John Hyde

*God knew John Hyde..and John Hyde knew God..*

*Again I say, there is all the difference in the world between knowing the Word of God and knowing the God of the Word!*

*John Hyde's "homing instinct of the soul" led him to the prayer closet. That was his habitat..*

*There he soared..there he listened..there he heard.. there he grew.. there he wept..there he developed spiritual muscle..*

*The only reason we have a record of John Hyde is that in this art of prayer he was a master in our Israel!*



## சபை கண்டிருந்த
## மா மகா ஜாம்பவான்கள்

# John Hyde

தேவன் ஜாண் ஹைடை அறிந்திருந்தார்..
ஜாண் ஹைடும் தன் தேவனை நன்றாகவே
அறிந்து வைத்திருந்தார்..

நான் மறுபடியும் சொல்வேன்..
"இந்த உலகத்தில் தேவனுடைய வார்த்தையை
அறிவதற்கும், அந்த வார்த்தையின்
தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிந்து
வைத்திருப்பதற்கும் ஒரு மிகப்பெரிய பார தூர
வித்தியாசம் உண்டு.."

ஜாண் ஹைடின் ஆத்துமாவின் இன்பம் ஒன்றே
அவரை அடிக்கடி ஜெபத்தின் தனிமைக்கும்
மறைவுக்கும் இட்டுச் சென்றது.அவரது
குடியிருப்பு அதுவே ஆகிப்போனது..

தன் நேசரின் சத்தத்தைக் கேட்டதும்
செவிகொடுத்ததும் அவர் அங்கே தான்!
ஜெபத்தில் அவர் வளர்ந்ததும், அழுததும்
புலம்பியதும் அங்கே தான்!

ஆவிக்குரிய உயர்ந்த உன்னத சிகரங்களுக்கு
அவர் எழும்பியதும் அங்கே தான்! தனது
ஆவிக்குரிய தசைநார்களை முறுக்கேற்றி அவர்
பெலன் கொண்டதும் அங்கே தான்!

இந்த ஜெபக்கலையிலே ஜாண் ஹைடு ஒரு
கைதேர்ந்த கலைஞனாய் இருந்ததினாலேயே
அவரைப் பற்றிய பதிவுகள் இன்றும் நம்மிடையே
அழியாத பதிவேடுகளாய் உள்ளன!



# Payson Of Portland

# "PRAYER

*Most of us are but sparrows in prayer and flutter no higher than the lowest branches ; but these "eagle" men soar into the heavenlies. None rose higher than Payson.*



***Because this man had the highest quality of intercourse with God, he had extraordinary power with men.***

*Mighty men like these got unusual answers to prayer because they were unusual in prayer..*

# WARRIOR"

Leonard Ravenhill

# Payson Of Portland

# "PRAYER

ஆவிக்குரிய ஜாம்பவானும்,
ஜெபத்தில் இராட்சதரும்,
உன்னதங்களிலே கழுகு போல
உயரப் பறந்த Payson க்கு முன்னால்
ஜெபத்தில் நாம் எல்லோரும்
'கீழிருக்கும் கிளைகளிலேயே
சிறகடித்து வட்டமிடும்
சிட்டுக்குருவிகள்' தான்!



Payson ஐ விட
விட ஜெபத்தில்
மேலெழுந்து
உயர எழும்பியவர்
எவருமில்லை என்பேன்!

தேவனோடு கூட மிக உயரமும் உன்னதமுமான
உறவில் அவர் இருந்ததினாலேயே
மனிதர் முன்பாக அசாதாரண வலிமையும்
வல்லமையுடனும் காணப்பட்டார் இவர்!

இவரைப் போன்றவர்கள் ஜெபத்தில்
அசாதாரண மாவீரர்களாய் நின்றதாலேயே
அவர்கள் ஜெபமும் அசாதாரண
பதில்களைக் கொண்டு வந்தன!

# WARRIOR"

Leonard Ravenhill

# THE GREAT WHITE THRONE JUDGMENT



Leonard Ravenhill

*I think we'd better watch this business of giving people only part of the Gospel. We need to be very careful of our sloppy evangelism techniques..*

*Yes, it is absolutely true that God loves us, but will you remind people of the goodness and the severity of God ?*

*One thing that's wrong with the world is that it thinks it's done with Jesus Christ and it hasn't even started with Him yet. For He stands at the end of the trail for every man -- rich or poor, bondsman or freeman, black or white..*

*Will you remind them that there is a day when mercy is cut off forever? Will you remind them that people pray in hell, but nobody answers? The dead, great and small, are going to stand before God in that awesome day..*

*The books are going to be opened, and justice, not mercy, will prevail. There is no mercy. Mercy is gone forever. Multitudes of people will be crying, "The harvest is past and the summer is ended and we are not saved" (Jer. 8:20).*

*Will you remind them while God is still sitting on a throne of mercy, that everyone, without exception, will one day stand before the Judgment Seat of Christ ? Be wise, repent, and believe the Gospel..*




சுவிசேஷத்தின் ஒரு பகுதியை மட்டுமே மிகைப்படுத்தி வெளிச்சமிட்டுக் காட்டுவதைக் குறித்து ஜாக்கிரதையாய் இருப்போம். தேவன் அன்புள்ளவராகவே இருக்கிறார் - ஆம். அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவரது தயவை மட்டுமே அல்ல, அவரது மறுபக்கமான கண்டிப்பையும் உன்னைக் கேட்கும் ஜனங்களுக்கு உணர்த்த மறவாதிருப்பாயோ ?

இயேசு கிறிஸ்துவின் கதை இத்தோடு முடிந்தது என்று உலகம் எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவரோடு இவர்களது கணக்கு இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லை என்று யாருக்குத் தெரியும் ?

பணக்காரனோ ஏழையோ, அடிமையோ சுயாதீனனோ, கறுப்போ வெளுப்போ - ஒவ்வொருவனுக்கும் கணக்குத் தீர்க்க இதோ நியாயாதிபதி வாசலண்டையிலே நிற்கிறார்.

ஒரு நாள் 'இரக்கம்' என்ற சொல்லே அடியோடு அகற்றப்பட்டுப் போகும் என்ற நிதர்சனமான உண்மையை பயப்படாமல் துணிந்து எடுத்துக் கூறுவாயோ ?

நரகத்திலும் கதறி ஜெபிப்பாருண்டு - ஆனால் அவர்களைக் கண்ணோக்கிப் பார்க்கத்தான் யாரும் இருக்கப்போவதில்லை என்பதை அழுத்தமாய்த் திருத்தமாய் ஆணித்தரமாய்ச் சொல்ல எழும்பி நிற்பாயோ ?

"அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது; நாங்களோ இன்னும் இரட்சிக்கப்படவில்லை" (எரே 8:20) என்று கூட்டம் கூட்டமாய்க் கதறக் கதற அவர்கள் ஓலமிடுமுன், "இன்னும் உங்களுக்காக தமது கிருபையின் ஆசனத்தில் தேவன் இரக்கமளிக்கக் காத்திருக்கிறார்.." என்று கெஞ்சிக் கெஞ்சி அவரது இரக்கத்துக்காக மன்றாட அவர்களை வருந்தி அழைப்பாயோ ?

காலம் கடந்து காட்சிகள் மாறுமுன், ஞானமாய் மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசித்து கிருபையைப் பற்றிக்கொள் ! இதை உனக்குச் சொல்லி எச்சரிப்பது என் மேல் விழுந்த கடமை ! உனக்குச் சொல்லாவிட்டால் எனக்கு ஐயோ !

# SODOM HAD NO BIBLE

**What Obligations has God to a people like us whose aggregate sin as a nation in one day is more than the sin of Sodom and her sister city Gomorrah, in one year ?**

**In my judgment a nation or nations that will go as far as we have gone deserves only one thing - that a Holy God speedily lay the rod of correction upon us to save us from complete disaster...**

Leonard Ravenhill



# SODOM HAD NO BIBLE

நமது முழு தேசம் மற்றும் சபையின் ஒரு நாளின்
சராசரி பாவத்தைக் கணக்கிடும் போது, அது
சோதோமும் அவளது சகோதரி கொமோராவின்
ஒரு முழு வருடத்தின் பாவத்தை விட மிக
அதிகமாய்க் காணப்படும்போது, நம்மைப்
போன்றவர்களுக்கு, நமது தேவன் எந்த விதத்தில்
கடமைப்பட்டுள்ளார் என்று நான் கேட்கிறேன் !

என்னுடைய கணிப்பின்படி, ஒரு தேசமோ,
தேசங்களோ, சபையோ, கர்த்தரை விட்டு சோரம்
போய், தூரம் போய் நிற்கும் தூரத்தைக் காணும்
போது, ஒன்றே ஒன்றுக்கு தான் நாம் முற்றிலும்
தகுதியாய் இருக்கிறோம் -
அது அவரது தண்டனையின் பிரம்பு !

Leonard Ravenhill



Leonard Ravenhill

# SODOM HAD NO BIBLE

*What Obligation*

***Has A Holy God***

*To A People..*

*who spend one hour in church*
*on Sunday,then walk to the ball park*
*to spend several hours walking*
*in the counsel of the ungodly*
*and sitting with the blaspheming*
*sinners who profane*

***His Holy name ?***



Leonard Ravenhill

சோதோமிலே
**வேதம்**
இருந்ததில்லை

ஞாயிற்றுக்கிழமைகளில் வெறும்
இரண்டு மணி நேரம் சபையில்
உட்கார்ந்துவிட்டு, மீதி நாள் முழுவதும்
மால்களிலும், பீச்சிலும், பார்க்கிலும்,
ஹோட்டல்களிலும் நண்பர்களுடன்
இன்ட்டர்நெட்டிலும்,சேட்டிங்கிலும்
டேட்டிங்கிலும் பொழுதுபோக்கும்,
விசுவாசி என்று தங்களைச் சொல்லிக்-
கொள்பவர்களை விட்டு விலகாமலும்,
அவர்களைக் கைவிடாமலும் இருந்து,
அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்க,

**ஒரு பரிசுத்த தேவன்,**
**அவர்களுக்குக் கடமைப்பட்டு**
**கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?**



Leonard  Ravenhill

**WHAT OBLIGATION**
**HAS GOD TO A PEOPLE..**

*who allow a newspaper stand*
*to have countless different magazines*
*sporting nude pictures ?*

**WHAT OBLIGATION**
**HAS GOD TO A PEOPLE..**

*who allow Japnese girls to be*
*imported to stand nude as*
**"WALLPAPER"**
*for some hot city spot ?*

SODOM HAD NO
**BIBLE**



Leonard  Ravenhill

தங்கள் சிஸ்டம் முழுவதிலும், லேப்டாப்பிலும் செல் போனிலும் கண்ட கண்ட இமேஜ்களையும் ஸ்டேட்டஸ்களையும் போட்டு, அவைகளை அரை நிர்வாண, முழு நிர்வாணப் படங்களால் நிறைத்து வைத்துக்கொண்டு, யூ-ட்யூபிலும் ட்விட்டரிலும் facebook லும் வாட்ஸப்பிலுமே வாழ்ந்து கொண்டு,"எங்கள் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நாங்கள் தடைசெய்யவில்லை" என்று தங்களை Gen-next பிலீவர்ஸ் என்று அழைத்துக் கொள்ளும் இன்றைய இளைய தலைமுறை இளவட்டங்கள் கேட்பதை எல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொடுத்து அவர்களுக்காக யாவையும் செய்து முடிக்க,

ஒரு வைராக்கியமுள்ள

**மகா பரிசுத்த தேவன்,**

அவர்களுக்குக் கடமைப்பட்டு கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?

SODOM HAD NO

**BIBLE**






ஆசீர்வாதம், அரவணைப்பு, பாதுகாப்பு, பரிபூரணம்,
செழிப்பு, கொழிப்பு, வாக்குத்தத்தம் வல்லமை என்று
ஆனந்த மழையிலும் அபிஷேக அருவியிலுமே
மக்களைக் குளிப்பாட்டி திக்குமுக்காடச் செய்து,
தேவனது சித்தத்தை அறிவதிலும், நித்தியத்தின்
கண்ணோட்டத்திலுமே வாழ்ந்து, பயத்தோடும்
நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு
வாழும் வாழ்விலிருந்து வழி தப்பப் பண்ணி, ஜனங்களை
ஆவிக்குரிய இருளிலும், குருட்டாட்டத்திலுமே வைத்திருக்கும்
இன்றைய நூதன அப்போஸ்தலர் கூட்டத்தோடு,
கூட இருந்து கிரியை நடப்பித்து, தமது வல்லமையுள்ள
வசனத்தை உறுதிப்படுத்துவதற்கு,

**ஜீவனுள்ள தேவன்,**

அவர்களுக்குக் கடமைப்பட்டு
கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?




ஆராதனை என்ற பெயரில் இவர்கள் போடும்
குத்தாட்டக் குதியாட்டக் கும்மாளங்களைக்
கண்டும் காணாதவர் போலிருந்து, தீர்க்கதரிசனம்
என்ற பெயரில் தன் ஜனத்தை வஞ்சித்து,
தங்கள் வயிறு வளர்த்து, சபையாகிய ஆசரிப்புக்-
கூடார வாசலிலேயே சகல அக்கிரமங்களையும்
சகஜமாய் நடப்பிக்கும் ஆசாரிய போதகர்களின்
மக்களாகிய நவீன ஓப்னி பினெகாஸ்களை,
இன்னும் அவர்களது ஊழியங்களிலே உயர்த்தி
உயர்த்தி ஆசீர்வதித்துப் பெருக்கிக்கொண்டே போக,

**தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால்**

**சபையைச் சம்பாதித்த**

**அந்த இரட்சகர்,**

**இப்படிப்பட்டவர்களுக்குக் கடமைப்பட்டு
கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன ?**

SODOM HAD NO
**BIBLE**



# SODOM HAD NO BIBLE

**SODOM HAD NO CHURCHES**
**We have thousands..**

**SODOM HAD NO BIBLES**
**We have millions..**

**SODOM HAD NO PREACHERS**
**We have ten thousands..**

**SODOM HAD NO Bible Colleges..**
**We have atleast hundreds..**

**SODOM HAD NO Gospel Broadcasts..**
**We are richly blessed with christian broadcasts..**

**SODOM HAD NO Histories of God's Judgments to warn it of danger..**
**We have volumes of them..**

**SODOM HAD NONE OF THESE..**
**SO WE HAVE NO EXCUSE..**



# SODOM HAD NO BIBLE

சோதோமிலே சபைகள்
இருந்ததில்லை..இங்கோ ஆயிரக்கணக்கில்...

சோதோமிலே பிரசங்கிக்கிற ஊழியர்கள்
இருந்ததில்லை..இங்கோ ஊழியர்களுக்குப்
பஞ்சமில்லை...

சோதோம் கொமோராவிலே பைபிள் காலேஜ்கள்
இருந்ததில்லை..இங்கோ காலை மாலை
காலேஜ்களுக்கு கணக்குமுண்டோ?

சோதோமிலே கிறிஸ்தவச் சேனல்கள்
இருந்ததில்லை..இங்கோ 24 மணி நேரமும்
சேனல்கள்மயம் தான்..

*இன்றைக்கு விரல் நுனியில் சகல ஆவிக்குரிய தகவல்களையும், அரிய ஆவிக்குரிய புத்தகங்களின் பதிவிறக்கங்களையும் முற்றிலும் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளும் எந்த நவீன இன்ட்டர்நெட் வசதிகளும் சோதோமில் இருந்ததில்லை.. இங்கே நமக்கோ உள்ளங்கையிலே சகலமும் அடக்கம்!*

சோதோமுக்கு தேவ கோபாக்கினையின் வரலாறு
இல்லை..இன்றைய கிறிஸ்தவ சமுதாயம்
அறியாதது என்ன உண்டு? ***கடைசியாக...***

சோதோமில் வேதம் இருந்ததில்லை..
நம்மிடமோ எத்தனை எத்தனை
மொழிகளில்..எத்தனை எத்தனை
மொழியாக்கங்களில்..கடல் போன்று கணக்கற்ற
புத்தகங்களும், விளக்க நூல்களும், CD, DVDக்களும்.. !

**ஆகவே போக்குச்சொல்ல நமக்கு இடமுமில்லை!**





*After Abraham left off interceding, Sodom perished..*

*While Abraham "stood yet before the Lord," men had a representative before God..*

*While Lot abode in Sodom (backslidden though he was), God still had a feeble representative with men..*

*While those positions were maintained, God did nothing.*

*When Lot went out of Sodom and when Abraham made his final appeal for the ten righteous men and found them not - then the fire of the Lord fell..*

*If God puts the millstone of our sin around the neck of this generation and casts into the nethermost depths of hell, that would be but our just desert..*

Leonard Ravenhill



சோதோமுக்காக தேவன் முன் மன்றாடி நின்ற ஆபிரகாம் கண்ணீரோடு நகர்ந்த பின்னோ, அல்லது அவனோடு பேசி முடித்த தேவன் போன பின்போ தான் சோதோம் வெந்து அழிந்தது !

ஆபிரகாம் "இன்னும் தேவனுக்கு முன் நின்று கொண்டிருந்த போது.." சோதோமின் ஜனத்துக்காக தேவனுக்கு முன் நிற்கும் ஒரு பிரதிநிதி இருக்கத்தான் செய்தான் !

பின்வாங்கிப் போனவனானாலும், லோத்து சோதோமிலே இருந்தவரை, தமக்கு முன் ஏதோ ஒரு பிரதிநிதியை அந்த ஜனத்துக்காக, அவனில் காணவே செய்தார் தேவன் !

அவர்கள் அவருக்கு முன்பாகத் தாங்கள் நின்ற வரையில் தேவன் சோதோமின் மேல் கை வைக்கவுமில்லை.. கொமோராவை அவர் தொடவுமில்லை !

பத்து நீதிமான்களுக்காகக் கடைசி வரை கெஞ்சி, அந்தப் பத்துபேர் கூட இல்லாத பரிதாப நிலையில் ஆபிரகாமை விட்டு - தேவன் போய் விட்ட பின்பே - அக்கினி மழை, மாரியாய்ப் பொழிந்தது !

லோத்து சோதோமை விட்டு வெளியேறிய பின்பே - தேவனின் அக்கினி கந்தகமாய்க் கொட்டித் தீர்த்தது !

கர்த்தருக்காக மீதியான ஒரு சிறு கூட்டம் சோதோமிலே இல்லாததினாலேயே அது முழுவதும் வெந்து அழிந்தது.

துக்கத்தோடு சொல்வேன்.."இந்தத் தலைமுறையினராகிய நமது பாவத்தின் ஏந்திரக்கல்லை நமது கழுத்திலேயே கட்டி, நம்மை நரக பாதாளங்களின் அடியில்லா ஆழங்களில் தேவன் அமிழ்த்திப் போடுவாரானால், அதைவிட ஆக்கினை என்ன உண்டு ?

இந்தக் கடைசி நாட்களின் கடைசி நாழிகையிலே அமெரிக்காவையும் அகில உலகையும் காக்கும் ஒன்றே ஒன்று உண்டானால், அது உலகத்துக்கு உப்பாகிய அவரது சபை ஒன்றே !

Leonard Ravenhill

# யோனாவும் இன்றைய சபையும்



தன் கீழ்ப்படியாமையின் எல்லைக்கே போய்விட்ட யோனா, ஒரு பக்கம் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்க, மாலுமியும் கப்பல்காரர்களும் பயத்தால் தத்தளித்துக் கொண்டிருக்க, கப்பல் உடைந்து நொறுங்கி சுக்குநூறாகிப் போக இருந்த நிலையிலும் எந்தக் கவலையுமின்றி நிர்விசாரமாய்த் தூங்கிக் கொண்டிருந்தான்..

இந்த யோனா, கடைசிக் காலத்தின் இந்தக் கடைசி வினாடி நேரத்திலும் தூக்க மயக்கத்தால் நிறைந்து நிர்விசாரமாய்த் தூங்கிக் கொண்டேயிருக்கும் விசுவாசிகளுக்கு முன்னடையாளமோ ?

இப்போதைப் பார்க்கிலும் வேறு எப்போதாவது இந்த அளவுக்கு உலகம் கொந்தளித்துத் தத்தளித்து உடைந்து நொறுங்கிப் போயிருந்ததோ?

இன்றைய சபை, இவ்வளவு கணக்கற்ற ஆவிக்குரிய ஏதுக்களை வைத்துக்கொண்டும் இப்போது இருப்பது போல இந்த அளவு தூங்கிக் கிடந்ததாக சரித்திரம் உண்டோ ?



# யோனாவும் இன்றைய சபையும்

"யோனா குறட்டை விட்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.." என்று The Septuagint என்ற வேத மொழிபெயர்ப்பு சொல்கிறது..

பயந்து நடுங்கிப்போன கடல் பயணிகள் கடல் கொந்தளிக்கக் காரணம் என்னவோ என்று கலங்கிக் கொண்டிருக்க, மாலுமி, தன் கண்களில் சிக்கிய யோனாவைக் கண்டு, "நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக் கொள்..உன் தொழிலென்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய் ? உன் தேசம் எது ? நீ என்ன ஜாதியான் ?" என்று சரமாரியாகக் கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தான்..

இதே கேள்வியைத் தான், தீவிரவாதத்தாலும், அணுகுண்டு அழிவினாலும், சீதோஷ்ண சீர்குலைவுகளினாலும், சோதோம் கொமோராவை விட சீர்கெட்டு சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் உலகமும்,

இன்று கீழ்ப்படியாமையிலும் பின்மாற்றத்திலும் தூங்கிக் குறட்டை விட்டுக் கொண்டிருக்கும் இன்றைய லவோதேக்கிய சபையைப் பார்த்து, "சபையே உன் வேலை என்ன ? பொறுப்பென்ன ? நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் ?" என்று எரிச்சலோடு கேட்கிறது..



LEONARD



RAVENHILL

***God speaks a heart-rending thing in the middle of this spiritual bankruptcy and spiritual misery here in Ezekiel 22nd chapter..***

***"Her priests have violated my law, and have profaned mine holy things: they have put no difference between the holy and profane, neither have they showed difference between the unclean and the clean, and they have hid their eyes from my Sabbaths, and I am profaned among them" (Ezek 22:26)***

***Note verse 25 of this 22nd chapter and send it to your favourite TV star preachers..***

***"The leaders among you became desperate, like roaring, ravaging lions killing indiscriminately. They grabbed and looted, leaving widows in their wake.."***

***If you are a church leader, God will hold you responsible for the spiritual state of your church. May be it is a prayerless church because it has a prayerless pastor. May be it has no tears because its pastor and decons have no tears..***



LEONARD  RAVENHILL

இன்றைய ஆவிக்குரிய பஞ்சத்துக்கும், ஆவிக்குரிய சூன்யத்துக்கும் நடுவே இருதயத்தைக் கிழிக்கும் காரியம் ஒன்றை தேவன் எசேக்கியேல் 22ல் சொல்வதைப் பாருங்கள்!

"ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள்.. பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும், அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பிக்காமலுமிருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நடுவிலே நான் கனவீனம் பண்ணப்படுகிறேன்.."

"அதிலுள்ள தீர்க்கதரிசிகள் அதின் நடுவில் கட்டுப்பாடு பண்ணுகிறார்கள். கெர்ச்சிக்கிற சிங்கம் இரை கவ்வுகிறது போல, ஆத்துமாக்களை அவர்கள் பட்சிக்கிறார்கள். திரவியத்தையும் விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அதின் நடுவில் அநேகரை விதவைகளாக்குகிறார்கள்.." என்ற இந்த எசேக்கியேலின் 22ம் அதிகாரத்தின் 25ம் வசனத்தை, நீங்கள் உங்கள் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுகிற உங்கள் பிரபல நட்சத்திரப் பிரசங்கியாளர்களுக்கு அனுப்பிவையுங்கள்..

நீ ஒரு சபைத் தலைவனாயிருந்தால், உன் சபையின் ஆவிக்குரிய நிலைக்கு நீயே பொறுப்பு! ஜெபமில்லாப் போதகரைப் பெற்றிருப்பதாலேயே சபையும் ஜெபமற்றுப் போனது! போதகர்களும் முப்பருமானவர்களின் கண்களில் கண்ணீரில்லாமல் போனதாலேயே சபையார் கண்களிலும் கண்ணீரைக் காணோம்!



LEONARD



RAVENHILL

சகல கள்ள உபதேசங்களுக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் விரோதமான ஒரு புனிதப்போரை நாம் தொடுத்தே ஆகவேண்டும்! கையில் எடுத்தே ஆகவேண்டும் !

அதற்கு முதலாவது நாம் செய்ய வேண்டியது தேவனுடைய வீட்டைக் கொஞ்சம் அடைத்து, அதைப் பெருக்கித் துடைத்துக் கழுவியெடுக்க வேண்டும்.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் இருந்தல்லவோ துவங்கப்போகிறது?

"அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்.. அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டு... லேவியின் புத்திரரை சுத்திகரித்து..." (மல் 3:2) என்று மல்கியா நடுங்குகிறார்..

தேவன் அமலேக்கியரையோ எமோரியரையோ சுத்திகரிப்பேன் என்று சொல்லவில்லை. மாறாக, அவர் தமது லேவியராகிய ஆசாரியரையே சுத்திகரிப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது..

the REFINER'S fire

LEONARD



RAVENHILL

*We need a holy war against all false teaching and all iniquity. First we must shut down the sanctuary and do some house-cleaning.*

*"The time is come that judgment must begin at the house of God" (1 Peter 4:17)*

*God begins with the spiritual leaders, then works down. Malachi warned, "But who may abide the day of His coming? and who shall stand when He appeareth?*

*...For He is like a refiner's fire, and like fullers' soap; and he shall sit as a refiner and purifier of silver: and he shall purify the sons of Levi " (mal 3:2,3)*

*Notice that He is not saying that He will purify the Amalekites or the Amorites; He will purify His priests !*

*the* REFINER'S *fire*




## ஒரு மனிதனை இன்னும் தேடிக்கொண்டேயிருக்கும் தேவன்

தேவனுடைய வீட்டின் பரிசுத்த அலங்கங்கள் இடிந்து, நமது வாலிபரின் வாழ்க்கையின் வாசல்கள், இரகசியப் பாவங்கள் மற்றும் இச்சைகள் என்ற அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டும் கிடக்கிறது..

ஆனாலும் சாத்தானின் அந்தகார வல்லமைக்கு எதிர்நின்று யுத்தம்செய்பவர்கள் நம்மில் வெகு சிலரே. நமது ஜனத்தைக் கட்டியிருக்கும் அக்கிரமங்களைக் கண்டு சுக்குநூறாகும் இதயங்கள் இன்று எங்கே?

"தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி அக்கினி இறங்குமாப் போலவும், உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும் இறங்கும்.." (ஏசா 64:2) என்று பிரசங்க பீடத்திலிருந்து தனது இருதயத்தைக் கிழித்து கடைசியாக எப்போது உங்கள் போதகர் ஜெபித்தார் என்று நீங்கள் சொல்லக்கூடுமோ?

அல்லது...

"ஜீவனுள்ள தேவனை நோக்கி என் மாம்சமும் இருதயமும் கதறுகிறது.." என்றோ, அல்லது..

ராகேலின் ஜெபத்தைக் கடன் வாங்கி, "எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் சாகிறேன்.." என்றோ அவர் ஜெபித்தது எப்போது என்றும் உங்களால் சொல்ல முடியுமோ?

# ஒரு மனிதனை இன்னும் தேடிக்கொண்டேயிருக்கும் தேவன்

ஒரு தேசம் போருக்கு ஆயத்தமாகி, தன் இராணுவத்துக்கு படைவீரர்களைத் திரட்டத் துவங்கும்போது குடும்பங்கள் சிதைகின்றன. மனைவி, பிள்ளைகள் கண்ணீரோடு விடைகொடுக்கின்றனர். அன்றாடத் தொழில் வணிகங்கள் அடைக்கப்படுகின்றன..

பள்ளிகள், கல்லூரிகள் காலவரையற்று மூடப்படுகின்றன. தொழிற்சாலைகள் போர்க்கருவிகள் உற்பத்திக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்கின்றன.. உணவுப்பொருட்களுக்குக் கடும் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. எந்த அசௌகரியங்களுக்கும் மக்கள் தங்களை உட்படுத்திக்கொள்கின்றனர் - எல்லாமே போருக்காகவே !

உள்நாட்டுப்போருக்கும், உலகமகா யுத்தத்துக்குமே தேசங்கள் தங்களை இப்படி ஒடுக்கி நெருக்கி, இவ்விதமாய் ஆயத்தப்படுத்திக்கொள்ளுமானால், வரலாற்றுப் போர்களுக்கு எவ்விதத்திலும் குறையாத இந்த ஆவிக்குரியவைகளுக்கும், ஒழுக்கத்துக்கும், பரிசுத்தத்துக்கும் விரோதமாய்க் கொத்தளங்கள் போடப்பட்டு, சிலுவைக்கு வெளியே துவங்கியிருக்கும் இந்தக் கடைசிக்கால ஆவிக்குரிய யுத்தத்துக்கு நாம் எப்படியெல்லாம் ஆயத்தப்பட்டு நிற்க வேண்டும் !



ஒரு மனுஷனை இன்னும்



தேடிக்கொண்டே இருக்கும் தேவன்

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்.."

"ஆகையால், நான் அவர்கள் மேல் என் கோபத்தை ஊற்றி, என் மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களை நிர்மூலமாக்கி அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலையின்மேல் அமரப் பண்ணுவேன்..என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்." (எசே 22:30, 31)

உலகத்திலுள்ள ஒவ்வொரு சுவிசேஷகனும் போதகனும் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மாதத்துக்காவது உரக்கப் படிக்க வேண்டிய வசனம் இது..

தேவனுடைய பட்சத்தில் நிற்பவன் யார்? துரைத்தனங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் துணிந்து நின்று யுத்தம் செய்யும் ஜெபவீரர்கள் எங்கே?

அவர் வந்து தமது கோபத்தின் அக்கினியினால் நம்மைப் பட்சித்துப் போடுமுன்பு, இவ்வுலகத்தின் பாவ வெள்ளத்தைத் தடுத்து அடைத்து அணை போடவும், தேவனுக்கு முன்பாகத் திறப்பிலே நிற்கவும் போகிறவன் நம்மிலே யார் ?

Leonard Ravenhill





## யோனாவும் இன்றைய சபையும்

ஒரு இக்கட்டான, போனால் திரும்பி வராத இடத்துக்கும் நிலைமைக்கும் தள்ளப்பட்ட பிறகே, அப்படிப்பட்ட பாடுகளின் பாதாள வயிற்றிலிருந்து கூக்குரலிட வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படுமோ?

யோனாவுக்கென்றே பெருங்காற்றையும், கொந்தளிப்பையும், பெரிய மீனையும், ஆமணக்குச் செடியையும், அரிக்கும் பூச்சியையும், உஷ்ணமான கீழ்க்காற்றையும் ஆயத்தப்படுத்தி, இவைகள் யாவற்றிற்கும் கட்டளையிட்டிருந்த தேவன், இன்றைய சபைகளைச் சரியான திசைக்குக் கொண்டு செல்ல உலக அளவில் ஏதோ ஒரு மகாப்பெரிய கொந்தளிப்பைக் கட்டளையிட ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாரோ?

"பாதாளத்தின் வயிற்றிலிருந்து...உமது பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்.." என்று கதறிய யோனாவைப் போல, அப்படி ஒரு பயங்கரமான விலைக்கிரயத்தை செலுத்திய பிறகே பாதாளத்தின் வயிற்றிலிருந்து அவரையும், அவரது பரிசுத்த ஆலயத்தை நோக்கிப் பார்க்க வேண்டிய நிர்ப்பாக்கிய நிலை நமக்கு வரக்காத்திருக்கிறதோ???



Leonard Ravenhill

*Jesus left His throne to intercept Paul on the Damascus Road..*

*He will come to us in power that we have never known before when we shed all confidence in the flesh and hide our scholarly diplomas in the bottom drawyer, to seek a Spirit - saturated heart with its eternity-conscious lifestyle and its demon-defying power..*

*We have had too much of what we now have for too long..*

**It is time for change..**

---

*On the personal.. congregational.. and national level, we need a spiritual earthquake..*

*Are you a candidate for making it happen?*

**It is costly..**

---



Leonard  Ravenhill

அங்கே தமஸ்கு வீதியிலே நடப்பது
என்னவென்று பார்க்கவும் கேட்கவும் தமது
சிங்காசனத்தைவிட்டு அன்று இறங்கி
வந்தார் இயேசு..

நமது மாம்சத்தின் மமதைகளை விட்டெறிந்து,
நமது பட்டங்களையும், படிப்புகளையும்
படிப்பறையின் குப்பைப் பெட்டியில்
விசிறியெறிந்து,

ஆவியானவரின் ஆராய்ந்து பார்த்தலுக்காகவும்,
நித்தியத்தின் நடுக்கத்தில் வாழும்
வாழ்க்கைமுறைக்காகவும், பாதாளத்தை
நடுங்கப்பண்ணும் வல்லமை ஒன்றுக்காகவும்
மட்டுமே அவர் முன் விழுந்துகிடப்போமானால், நாம்
இதுவரை கண்டிராத ஒரு வல்லமையோடு நம்மைச்
சந்திக்க இன்றும் இறங்கி வருவார் அவர் !

இப்பொழுது நாம் நமக்கென்றே பிடித்து
வைத்திருக்கிற எக்கச்சக்கமானவைகளை
எவ்வளவோ காலமாய் இறுக்கிப் பிடித்து
வைத்துக்கொண்டுவிட்டோம்..

---

ஒரு மாபெரும் மாற்றத்துக்கான நேரம் வந்து விட்டது !

தனிப்பட்ட வாழ்வில்..சபைகளில்.. தேசத்தில்.. ரிக்டர்
அளவுகளால் அளவிட முடியாத ஒரு ஆவிக்குரிய
பூகம்பம் வெடித்தே ஆக வேண்டும் !

அதின் காரணகர்த்தா நீயாக ஏன் இருக்கக்கூடாது?
ஆனால் அதின் விலைக்கிரயம் நீ நினைத்துக்கூடப்
பார்க்க முடியாத ஒன்று !

---







*You see, we think that if we read a lot of books about the deeper life, as good as they are, they will make us a saint..*

*I've got news for you. Even reading the Bible won't make you a saint! You've got to get it in your blood stream!*

*I believe I could line the altar, indeed I've seen the altar lined with hundreds, night after night in mass meetings, and yet I believe, at the end of the day, Jesus Christ could say to me, "Thou gavest Me no kiss."*

***Why?***

*Because I was so busy serving Him, I forgot to worship Him.*

*The priority that God wants in our life is that we sit at His feet worshipping Him in spirit..*



Leonard Ravenhill



Thou Gavest Me No Kiss

பிரியமானவர்களே, அருமையான, ஆழமான ஆவிக்குரிய புத்தகங்கள் படிப்பதால் நாம் பரிசுத்தவான்களாகி விடுவோம் என்று நாம் நினைக்கிறோம்..

நான் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்.. வேத புத்தகத்தைப் படிப்பதால் கூட ஒருவன் பரிசுத்தவானாகி விடமாட்டான்..அது நம் இரத்த நாளங்களில் ஏறி ஊறியிருக்க வேண்டும்!!

இன்று நான் பெரிய பெரிய சுவிசேஷக் கூட்டங்களை நடத்தலாம்.. அதின் முடிவில் நூற்றுக்கணக்கானோர் முன் வந்து தங்களை ஒப்புக்கொடுக்கலாம்..

ஆனால் நாளின் முடிவிலோ..இயேசு என்னைப் பார்த்து.."நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை"என்று சொல்லக்கூடும் !

ஏன் தெரியுமா?

ஏனென்றால் அவரது ஊழியத்தில் நான் எப்போதும் பிஸி பிஸி பிஸி..ஓட்டம்..ஓடிக் கொண்டே இருக்கிறேன்..அவருக்குக் கொடுக்க வேண்டிய கணிசமான நேரத்தைக் கொடுத்து அவர் பாதம் அமர்ந்து அவரை ஆராதித்து அவரது இருதயத்தைக் குளிரப்பண்ணத் தவறிவிட்டேன்..நம் வாழ்வில் அவர் விரும்பும் முதலும் முழுமையுமான காரியமே அவர் பாகத்தில் அமர்ந்து அவரை நேசித்து ஆராதிப்பது தான். மற்றதெல்லாம் அதன் பிறகே !



RAVENHILL PAGES

# THOU GAVEST ME NO KISS: BUT THIS WOMAN SINCE THE TIME I CAME IN HATH NOT CEASED TO KISS MY FEET.

LUKE 7:45 KJV

*Friend, I've been round the world a few times, it doesn't give me any standing with God. I happen to write a best seller or two, it doesn't give me any prestige with God.*

*You know, at the end of this day, however much I preach, however much you sing, however much you serve, the Lord is going to get a record.*

*You tried to do this and that and God would say at the end of the day.."Son, it's not what you preached over TV, or radio, to millions. Or two, or three, or one person you visited who was sick...But, did you kiss Me today?*

*"Son, you were very busy, very active, you made some new friends, people said you preached well.."*

**But listen son.. should I say..**

*"Thou Gavest Me No Water,*
*Thou Gavest Me No Oil,*
*Thou Gavest Me No Kiss.?"*

RAVENHILL PAGES

# "நீயோ என்னை முத்தம் செய்யவில்லை.."

நண்பனே..நான் உலகம் முழுவதும் ஒரு சில தடவைகள் சென்று வந்திருக்கிறேன்..அதனாலேயே அவர் எனக்குத் தன்னருகே முதலிடம் தந்துவிடப்போவதில்லை..

என்னுடைய சில புத்தகங்கள் மிக அதிகமாக விற்பனையாகிறவை..அதற்காக நான் கர்த்தரது பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றவன் என்று அர்த்தமல்ல..

நான் இந்த சீமோனை சற்று உற்றுப் பார்க்கிறேன்..இயேசு அவனைப் பார்த்துச் சொல்கிறார்.."சீமோனே, நீ எல்லாம் செய்தாய் சரிதான்..ஆனால் செய்ய வேண்டியதைச் செய்யாமல் தவறிவிட்டாயே !

கடைசியாகச் சொல்கிறேன்..நான் எவ்வளவு பிரசங்கங்கள் செய்தாலும் வெவ்வேறு ஊழியங்கள் செய்தாலும் கர்த்தரது கணக்கே தனி..

அவர் சொல்வார்.."மகனே! நீ இன்று இலட்சக்கணக்கானவர்களுக்கு டிவியில் பிரசங்கித்தாய்..கூட்டம் நடத்தினாய்..வியாதியஸ்தரை சந்தித்தாய்..இன்று மிகவும் பிஸியாக, ரொம்ப சுறுசுறுப்பாக, மிக வேகமாயிருந்தாய்..நீ மிகவும் அழகாகப் பிரசங்கம் பண்ணினாய் என்று எல்லாரும் உன்னைப் புகழ்ந்தார்கள்..

ஆனால் மகனே..என்னைப் பார் ! இவ்வளவுக்கும் மத்தியில் நீ என்னை முத்தம் செய்தாயா?"

நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை..
நீ என் தலைக்கு எண்ணெய் பூசவில்லை..
நீ என்னை முத்தம் செய்யவில்லை..

*You gave Me NO KISS !!*

[அதாவது நீ எல்லாம் செய்திருந்தும், உனக்காகவே காத்துக்கிடக்கும் என்னைச் சந்திக்கவோ என்னோடு நிதானமாய் அமர்ந்து பேசவோ உன்னிடம் எனக்காக நேரமில்லை..]

# Thou Gavest Me No Kiss

***"Thou Gavest Me No Water,
Thou Gavest Me No Oil,
Thou Gavest Me No Kiss."***

***Bretheren, It's going to be like that in the great day. The first are going to be last. You see God's values are not our values. He isn't going to give me a reward because I preached so many sermons, or I wrote many books.***

***You see, we put the accent where God never put it. We put an accent on working for Jesus. And there is no such thing. That's not the first thing that God requires. "The Father seeketh such to work for Him." No, no, no. I believe God is getting less worship today than ever He's gotten, despite the crowds we are getting.***

***We want to work ourselves to death, give out tracts, run here, run there, come home exhausted and we've a plane to catch tomorrow and everybody is waiting for us - but never care to sit at His feet..***



Leonard
Ravenhill

# நீயோ என்னை முத்தஞ்செய்யவில்லை...

"நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை.."
"நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை.."
"நீ என்னை முத்தம் செய்யவில்லை.."

சகோதரரே..நாம் தேவனுக்கு முன்பாக நிற்கப்போகிற நாளில் இப்படித்தான் நடக்கப் போகிறது..கர்த்தரின் மதிப்பீடுகள் நாம் நினைப்பது போல் அல்ல..

நான் ஏதோ பல புத்தகங்கள் எழுதி விட்டதாலோ, நிறைய பிரசங்கங்கள் செய்து விட்டதாலோ, அதின் அடிப்படையில் அவர் எனக்குப் பலன் தரப்போவதில்லை..

நாம் இயேசுவுக்காக ஏதாவது செய்து கொண்டிருப்பதையே எப்போதும் முதன்மைப் படுத்துகிறோம்..ஆனால் அது அப்படி அல்ல..தேவன் கேட்கும் முதன்மையானதும் முக்கியமானதும் நாம் அவருக்காக செய்யும் கிரியைகள் அல்ல..அல்லவே அல்ல..

அங்குமிங்கும் ஓடுவதும், கூட்டங்கள் நடத்துவதும்,மிகவும் பிஸியாக இருப்பதும்..நாளின் கடைசி நேரத்தில் சோர்ந்து போய் வீடு வந்து சேர்ந்து.."ஐயோ நாளைக்காலை flight ஐ பிடிக்க வேண்டுமே! இவ்வளவு பேர் எனக்காகக் காத்திருப்பார்களே.." என்று சொல்லி இப்போது இருப்பது போல் எப்போதும் ஊழியர்கள் ஓடிக்கொண்டே இருந்ததில்லை-அவர் பாதம் அமராமல்..



# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?




இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...




மீண்டும்
ஒரு
மிஸா ?




இக்காலத்துக்கு
உதவும்படி...
( 5 in 1 Pack )



# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !




என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

## ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

வருகைக்கு முன்னான வசந்தம்

எழுப்புதல் ஏவுகணைகள் Vol.1-5

தீக்கொளுத்துவேன் ! தீக்கொளுத்துவேன் !

யோவேல் மறவேல் !

ஹிட் லைக் ஹிட்லர்

இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !

ஆத்துமப்பிணைப்பு ( Soul Tie )

விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்

கறுப்பு பெந்தெகோஸ்தே

ஆரம்பகால இரத்தசாட்சிகள்

அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..

எழுதிவைத்தான் எசேக்கியா !

எனக்கு உண்டானவைகளில்
நான் பெற்றுக்கொள்ளாதது யாது ?

தேவனின் அசையாச் சொத்து

திரை உலகே ! கலை உலகே !

Dr. Paul Enenche Quotes

ரேவன்ஹில் பேஜஸ் Vol- 1 & 2

# மொழிபெயர்ப்புகள்:



ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]



கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]



நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]



கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில் தீக்கணைகள்
[ Powerful Quotes of
Rev. Leonard Ravenhill ]



என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

# மொழிபெயர்ப்புகள்:




இதயத்துடிப்பு
HEART BREATHING




என்றும் தணியும்
இந்த எழுப்புதல்  தாகம்? Part - 2
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




ரேவன்ஹில்
பேஜஸ்




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# மொழிபெயர்ப்புகள்:




எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 1




எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 2




எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 3




எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 4




எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 5

# மொழிபெயர்ப்புகள்:




மிஷன் 2024




குருதிப் பிரளயம்

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :


**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

அடைபட்ட
அக்கினி

**Pr. S.Romilton**
Delhi
98106 46981



பாஸ்டர். **ரொமில்ட்டன்**

# எழுப்புதல் ஏவுகணைகள்

**QUOTES SERIES ( VOL - 4 )**

" தன்னை முழுவதுமாய் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த ஒரு மனிதனைக் கொண்டு தேவன் செய்பவைகளைக் காண இந்த உலகம் காத்துக் கிடக்கிறது.. " என்று சுவிசேஷகர் டி.எல்.மூடியின் நண்பர் ஹென்றி வார்லே சாதாரணமாய்த் தன் உரையாடலில் சொன்ன வார்த்தை ஒன்று மூடியின் உள்ளே நெருப்பைப் பற்றவைக்க, " நான் ஏன் அந்த மனிதனாய் இருக்கக் கூடாது ? ஓ ! என்னை அப்படிப்பட்ட ஒரு மனிதனாக்குமே.. " என்ற அவரது ஜெபமே டி.எல்.மூடியை தேவன் மிகப்பெரிய அளவில் உபயோகிக்கக் காரணமாயிற்று..

" ஒரு தேசத்தில் அக்கினியைக் கொளுத்த நெருப்புப் பொறி ஒன்றே போதுமானது " என்றார் C.H. ஸ்பர்ஜன். இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளோடு..
**எழுப்புதல் ஏவுகணைகள்**


அடைபட்ட அக்கினி

**PASTOR. S. ROMILTON**

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110 091.
Mob: 9810646981